யாகாதிர்.

# ஆத்துமஞான பஞ்சரத்தினசிந்து

நாகூர் ஷாகுல்ஹமீது பாதுஷா
ஆண்டவரவர்கள் பேரராகிய
தவசிரேஷ்ட சர்குருநாதா
ஹலரத் மௌலானா
**செய்கு சுல்த்தான் கலீபாசாஹிபு**
ஆலீம் ஆரிபுபில்லா ஹில்காதிரி ஒலியுல்லா
அவர்களின் கலீபாவாகிய
மேலப்பாளையம் மெய்ஞ்ஞான அருள்வாக்கி புலவர்
**செய்குமீறன்லெப்பை கலீபாசாஹிபுல்காதிரி**
யவர்களாலியற்றி
நாகூர்தர்கா சரீபிலரங்கேற்றி
நாகூர்ஷாகுல் ஹமீதிய்யா பண்டகசாலை
**சிங்காரவேலு செட்டியாரவர்கள் செய்த**
பொருளுதவி முயர்ச்சியால்

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது

ஹிஜ்ரி 1350 துல்காஹதா

1932

…தின் விலை அணா 4

Q7:417
1132
183819

யாகாதிர்

# ஆத்துமஞான பஞ்சரத்தின சிந்து

திருநெல்வேலியைச் சார்ந்த மேலப்பாளையம்
சங்கீத மகா வித்வான்
ஷாகுல்ஹமீதுப் புலவரவர்கள் குமாரர்
மெய்ஞ்ஞான அருள்வாக்கி
புலவர்
செய்குமீருன் லெப்பை கலீபா சாஹிபுல் காதிரியவர்களா
லியற்றியது

## கடவுள் வாழ்த்து

### வெண்பா

முக்கோண வீதி முளைத்திலகு தீபம்போல்
ஹக்காக நின்றிலங்கும் ஆண்டவனே—முக்கியமாய்
போற்றுமெய் ரூபத்தின் பூரணத்தின் றாஹிதனை
சாற்றுதர்க்கு நல்லருளைத் தா. 1

### அறுசீர் விருத்தம்

திருமணி மஹ்றுதாத்தின் றிகளொளி தோற்றமெல்தாங்
கருமணி வடிவைப்போலே ஹாலிராய் தோன்றிநயனத்
திருமணி நேத்ரவட்டத் திலங்கிய ஆத்துமாவை
குருமணி யாகப்பாட குருபரன் காப்புநீயே. 2

### வசனம்

தெளிவான தீனுல் இஸ்லாமென்னு மார்க்கத்தில் நடந்து வருகிறதாலி பானவனே திட்டமாக அறிந்துகொள். உன் உடலுக்குள் ஒடித்திரியும் றாஹு என்னும் ஆத்துமாவானது, ஆண்டவனுடைய ஒரு வொளிவாயிருக்கும். அதுதான் முகப்பதென்னும் உகப்பினுடைய ஸ்தலம். அதில் நான்குவித அம்ஸங்களுண்டும்.

1-வது, றாஹு நாமியா வளர்கின்ற ஆத்துமா.
2-வது, றாஹு முதஹர்ரிகா உசும்புகின்ற ஆத்துமா.
3-வது, றாஹு நாத்திகா பேசுகின்ற ஆத்துமா.
4-வது, றால்ஹு குதுசியா பரிசுத்த ஆத்துமா.

## சிந்து

(இராகம்—திருவுற்றிலத கங்கை என்ற மெட்டு)

திருவுற்றிலகுமந்தப் பொருள்றாஹின் னூத்துமாவை
சேர்ந்திடு மிவ்வுடலுக்குள் காட்டுவேன்-அதில்
சார்ந்திடும் நாலின்வகையை தீட்டுவேன்-முதல்
தீரநாமிய பாரமாமுத ஹர்ரிகாவெனு நாத்திகாவாம்
சிறக்கும் றாஹுல் குதூசியாமீது-ஞானம்
துறக்குமெய் ரூபவழியாமிது. 1

நாமியா வளர்க்கிறது சேமமா முதஹர்ரிகாவே
நனிவாய்ச் சடலமசைவு செய்ரது-றாகு
பனிநாத்திகாவும் பேசுகின்றது-வுடலில்
நாதனின் ஞெனியோதிடு மெய்யாதியாம் றாஹுல்குதூசி
நலமாம் பரிசுத்த ஆவியானதே-யதின்
றலமா மெய்மூளை வழியாமிதே. 2

முந்தி யாத்துமா வதுதான் பிந்தியுட லெவ்விடத்தில்
முடுகிவியா பித்திருக்கிறது-அது
வுடல்முழுது நிரம்பிருக்கிறது-ரண்டா
மூர்க்கவாத்தும யோர்க்கமாயுதி ராக்கினிப் பார்வைப்பிரகாச
முன்னிலே கருவிகளை நடத்துரது-சுயந்
தன்னிலே ராஜாங்கமே செலுத்துரது. 3

மூன்றுவ தாத்துமாவே தோன்றிடும் நாபியில்நின்று
மூச்சினொ டெழும்பிடுஞ் சுவாசமே-வந்து
பேச்சினோ டோடிடும் பிரகாசமே-சது
மோனஆத்தும வானதே பிரதான இருதயமீதினின்று
மூளையோடிருந் தரசுசெய்ரது-எந்த
வேளையுநிரா மயமாயுள்ளது. 4

யேத்தமாமிவ்வுடலுக்குள் ளாத்துமா மூன்றுமழிந்து
யெடுபட்டுபோகிடு மவ்வேளையில்-நயனத்
திடையிலு லாவிடு மந்நாளையில்-ஆதி
ஏகஞயகஞகவே நின்றாடிடும் றாஹுல்குத்தூசி
இலங்கும் பிரகாசசோதி பார்க்குவீர்-ஞானம்
துலங்கு மெய்யுடலை யறிகுவீர் 5

காமிலான செய்கைதேடி சேமமா நாகூரில் சென்று
காதிரொலி ஆண்டகை இடத்திலே-நின்று
ஓதிடு மவ்வேளையிற் கனவிலே-காட்டும்
ஹாதியாஞ் ஜெகசோதியாந் தவநீதியாஞ் சுல்த்தான்கலீபா
கைபிடித்து காட்டிவைத்த தீர்ச்சையே-எநதன்
மெய்யினின் மெய்யாக கண்ட காட்ச்சியே 6

திங்களையளைத்த நபிமங்களத்துடனலிக்கு
செய்திடு மெஞ்ஞானோபதேசமாம்—இது
தெய்வ அம்சம் பொருந்துப் பிரகாசமாம்—ஹக்கன்
தீனின் குலவழிஞானியாய் வருமோனஷாகுல் ஹமீதுப்புலவர்
செய்தவக் குமாரன் சொல்லுஞ் சிந்து—இதை
மெய்யுடன் படிப்போர்க்கு மேலிது 7

வசனம்

ஞான மென்னும் ஹோதாவில் நடந்து வருகிர தாலிபான வனே 1-வது றாஹு-நாமியாவாஜிபுல் உஜுதுநபுசு அம்மாரு உள்த்தல மண்ணீரல் அதர்க்கதிகாரர் ஜிபுரீல் வழிசரியத் தெடுத்து திக்றுஜல்லியால் இல்முல் எக்கினே கொண்டு மகாம் நாசூத்திற் சேர்ந்து கொள்வாயாக:

---

சிந்து

(இராகம்—தேள்ளு தமிழுக் குதவு மென்ற மெட்டு)

ஆத்துமாறாஹு நாமியாவுடனே—நப்சு
அம்மாரா கொழுகி நிற்குந்திடனே—யதை
யடக்கும் வழிசரியத் தெடுத்து மெய்யுடற் றன்னே
யறிவா யதை தெறிவாய் (1)

இச்சையை மிகுதியாக கொடுத்தே—கொண்
டிருக்குங் கெடுதிகுணம் விடுத்தே—உன்னில்
ஏத்தமான ஆத்துமாவின் சூஸ்த்திரப் பொருள் மந்திர
மெடுப்பா யதை தொடுப்பாய் (2)

லாஇலாஹா இல்லல்லாவென் றோது—நம்பி
நாசூத்திடது மார்பதின் மீது—பார்த்து
நாவினில் திக்கிர் ஜல்லியை யோய் வில்லாமல் செய்து வந்தால்
நலமே யதின் றலமே (3)

ஹறய்வானிய்யத்தான சூரத் தோணும்—அங்கு
அண்ணல் மலக்கு ஜிபுரீலே காணும்—பாவா
ஆதநன்னபியுடனே தும்புபத்கரையும்
அறிவா யொன்னில் தெரிவாய் (4)

வாஜிபுல் உஜூதான நபுசாம்—அதில்
வந்திடு மிஸ்த்தூலரூபம் புதுசாம்—தீனின்
வழியையடுத்து ஞானப் பொருளில் மனதையூட்டி
வாழ்வாய் எப்பும் ஆள்வாய் (5)

மண்ணும் பற்குத்தியா மிவ்வுடலில்—வழி
வாசலது நாக்கின் ரெனியதுவில்—ஒரு
வல்லவன் தொழுகைதனை யுல்லாசத்துடனெடுத்து
வருவா யருள் பெருவாய் (6)

நபுசு செய்தானியாவை யொடுக்கி—எந்த
நாளெல்லாம் வணக்க முளிப்பாக்கி—திக்கிர்
லாஇலாஹா இல்லல்லாவை ஆயுளுள்ளிணக்கங் கொண்டு
நாடே மனங் கூடே (7)

முஸ்லீமானவர் களின் வழியாம்—இதை
முடுகி நடப்பவர் கல்பொளிவாம்—அருள்
முத்திமெய் யக்குலுடன் புத்தி வணக்க மெடுத்து
முடிப்பா யருளெடுப்பா (8)

ஆலமா மிதாலிதை கொண்டு—புலன்
அடக்கி இல்முல் எக்கினை விண்டு—ஒரு
ஆதியினருள் நிறைந்த சோதிஇற சூல்சரகை
அடுப்பாய் வழி தொடுப்பாய் (9)

## வசனம்

திட்டமாக தெரிந்துக் கொள் தாலி பானவனே
2. வது றாஹூமுதஹார்ரிகாமும் கினுல் உஜூது
நபுசுலவ்வாமா உள்தலம் கரூசரல்
அதர்க்கதிகாரர் மீய்க்காயில் வழிதரீகத் தெடுத்துதிக்கிர் கல்பியால்
இல்முல் எக்கினைகொண்டு மகாமல கூத்திர்சேர்ந்து கொள்வாயாக

---

## சிந்து

(இராகம்—ஆறுமுகவடி வேலவனே என்ற மெட்டு)

தோணும் றாஹூ ஆத்துமா முதஹர்ரிகா
துதிமும் கினுல் உஜூது
தோன்று நபுசுலவ்வாமாவதோடு
துலங்குந் தரீகத்திது (1)

மலகூத்திருநாசி சுழிமுனை தன்னில்
மருவிகுருவை நாட்டி
மாருதியானங்கள் செய்து வந்தாலுடல்
வசமாகுமொன் றன்னில் (2)

ஆலமலக் கூதகில் வழியாக
அரூபியாய் நித்திரையில்
ஆடித்திரியு மயாத்தான ஆத்துமா
அதுவாகு மிவ்வழியில் (3)

இல்லல்லா வென்னுந்திக்கிர் கல்பியாக
இசைவாக செய்யவேணும்
வெல்லு மலக்கு மீய்க்கா யிலுடனே
வெளியாகியே காணும் (4)

வுடலிலதர்க்கு தலங்கரு ஈரலா
மோங்குமதின் வாசலாம்
ஒளியுற்ற கண்ணுமதை பார்த்து நபிதோழர்
உமரிப்னு கத்தாபாம் (5)

உமரு கத்தாபோடுமூசா நன்னபியையும்
உருதியா யுடலுக்குள்ளே
தமருட னம் பியாஅவுலியாக்களையுனி
ஜல்தியாய் கண்டுகொள்ளே (6)

மூமீன்கள்செய்யு மனுஷ்ட்டான வணக்கத்தில்
முறையாய் நடந்துகொண்டே
மூர்க்க நபுசு ஹைற வானியை யொடுக்கி
முத்தி தலமுங்கண்டே (7)

ஆலமஜ்சாமென்னு மெய்ரூப சூழ்சத்தில்
அருளான தாத்துக்குள்ளே
ஐனில் எக்கினின்ச் சுடரொளிவானதை
அகந்தன் னிற்கண்டுகொள்ளே (8)

கண்காட்ச்சியாகவே கண்டுதரிசித்து
கத்தனை எத்தினமும்
கல்புக்கண்ணால் பார்த்து நோட்டமிட்டிருந்திடும்
காசினி லனுதினமும் (9)

## வசனம்

ஞான மென்னும் அகமியப்பொருள் தெரியவந்ததாலிபான வனே திட்டமாக கண்டுகொள் 3-வது றாஹறூனாத்திகாமும்தனில் உஜூதுநபுசுமுல் ஹிமா. உள் தலம் நுரையீரல் அதர்க்கதிகாரர் இஸ்ராபீல் வழி ஹகீகத்தெடுத்து திக்றுறாஹியால் ஹக்குல் எக்கினைகொண்டு மகாம்ஜபரூத்தில் சேர்ந்துகொள்வாயாக.

---

## சிந்து

(இராகம் பூமி மெச்சிடும் என்ற மெட்டு)

நாத்திகா வெனுஞ் சூஸ்த்திர ஆத்தும
நாடுவாய் மனங்கூடுவாய் தவந்தேடுவாய்
நபுசுமுல் ஹிம்மா மும்தனில் உஜூதினில்
நல்குவாவ் எப்புஞ் செல்குவாய் (1)

ஆதியால் மொழிவருகிர தாகவே
அறிகுவாய் யதை தெரிகுவாய் ஞானம் புரிகுவாய்
அல்லாவெனுந்திக்கிர் றாஹியை மூச்சினில்
அடைக்குவா யருள் தொடுக்குவா (2)

ஜபரூத்தில் செய்குவெளியாகி வருவதை
சந்திப்பாய் மனம் புந்திப்பாய் ஞானம் சிந்திப்பாய்
தாஹா முகம்மது நபியின் ஸிபத்தோடு
சாருவா யதில் சேருவா (3)

நட்ப்பா யுடலுக்குள் நுரையீரலதின் வாசல்
நாசியா மதுவாசியாஞ் சுயதேசியாம்
நடக்கு மிசுராயி லுதுமானையுங்கண்டு
நற்றிகொள் ஞானம் பெற்றுக்கொள் (4)

நபுசு றாஹானி யுடனுறவாடி
நடக்குவாய் கல்பை பார்க்குவாய் அருள்சேர்க்குவாய்
நலமேவு மெய்ஞ்ஞான தௌஹிதினிற்கூடி
நாட்டுவா யருள் கூட்டுவா (5)

உதிப்பென்னு மெல்ஹாம கிகத்துடலுக்குள்
ஓடுமே யருள்கூடுமே ஜெய நாடுமே
ஓங்கார கம்பத்தில் நீங்காத ஐன்சுடர்
ஒளிருமே எங்குந் தளிறமே (6)
முகக்கண்ணை மூடி யகக்கண்ணிணுல் பார்த்து
மூட்டிக்கோ கல்லை தீட்டிக்கோ துறந்தோட்டிக்கோ
முன்விழி மத்தியில் நன்மையைத் தீபத்தை
முன்னிலே கண்டொந் தன்னிலே (7)
பார்க்கப் பார்க்க பரமானந்த சோதி
பந்தாடுமே கல்புநாடுமே யதிற்கூடுமே
பாரொலிமார்கள் நடக்கு வழிதன்னை
பார்த்துக்கொள் தவஞ் சேர்த்துக்கொள் (8)
ஆலமருவா வினிற்சிலமுடன்றன்னை
அறிகுவாய் மனம்புரிக்குவாய் தவம் பெருகுவாய்
ஹக்குல் எக்கின்றனை முக்கியமாய் கண்டு
ஆசிப்பாய் ஞானம் பூசிப்பாய் (9)

வசனம்

ஞான மென்னும் பிரகாசம் தெரியவந்த தாலிபானவனே திட்டமாக அறிந்து கொள். 4.வது றாஹூல் குதுசியா ஆரிபுல் உஜூது நபுசுமுத்ம இன்ன உள்த்தலம் பீத்திரல் அதர்க்கதிகாரர் இஸ்ராயில். வழிமஃரிபத் தெடுத்து திக்றுசிற்றியால் கமாலுல் எக்கினை கொண்டு மகாம் லாகூத்திற் சேர்ந்து கொள்வாயாக

---

சிந்து

(இராகம்—செந்திமா நகரந்தனில் மேவிய என்ற மெட்டு)

தோற்றமாமதி யாத்துமா றாஹூல்குத்
தூசு நபுசுமுத்ம இன்னவாம்—மதி
பேசுமாரிபுல் உஜூதியாம்—திக்கிர்
துங்கமா இருகண்கள் மூடி
யங்கத்துள் விற் றிங்கள் போலொளி
தோன்றுமாயிரத் தெட்டிதழின் சுடர்
துலங்குந் நயனத்திடையிலே—கண்டு
கலகத்தை நீக்கு மப்போதிலே— (1)

மோகமாகிய லாகூத்து பதியினில்
முன்னோனைத் தவிர வேறில்லையே—அங்கு
மன்னனைப் பார்ப்பதுந் தொல்லையே—மன
முத்தியாய் குருபக்தியாய் தவ
சித்தியாய் பரிசுத்த ஆவி
மூச்சினோடிணங்கும் பொருளானதை
மூக்கு முனைபுருவ மத்தியே கண்டு
பார்க்குஞ் சுயரூப சித்தியே (2)

ஆலமான இஸ்த்தூலவுடலுக்குள்
ஐனின் சுடரொளி வீசுமே—ஏகன்
மெய்ரூபம் நின்றெதிர் பேசுமே—ஒரு
ஆதியின் றிருதூதராமகு
மூதரிறசூல் சோதி வடிவே
ஆத்துமா வென்னும் நேத்திர வட்டத்துள்
ஆடித்திரியுங் கண்பிள்ளையெ—கண்டு
கூடித் தெரியுமாண் பிள்ளையே (3)

சடலமானதில் கொடுமை நெருப்பதின்
தான முடலுக்குள் பித்ததாம்—அதில்
மோனமுறும் வழிகாததாம்—அங்கு
தலைமை கொண்டுல கெங்கும் பல்லுயிர்
தொலைக்கு மிசுராயீலலியையும்
தம்பமாகவே அப்புவி மீதினிற்
றன்னுக்குள் தானகைகாங்குவீர்—லோக
மென்னும் பேருடலையறிகுவீர் (4)

சிலமேவிய ஆலமின் சானிலே
சேருங் கமாலுல் எக்கினிலே—நின்று
கூருஞ் ஜலாலின் ஜமாலிலே—யுற்று
சிந்தையைப் பார்த்தெந்த நேரமும்
பந்தம் போலொளி வந்திலங்கிடும்
சீனென்னுங் கண்ணாடியின் வட்டமே
தெளிவாய் துறக்குமப் போதிலே—ஹக்கன்
ஒளிவாக காணுந்தர் போதிலே (5)

ஏகனாயனென் றோங்கு மெய் மூளையோ
டிருதய தாமரைக்காயினின்—றற்று
வருகு முதிப்பு நினைவினின்—நின்று
எங்குமே பிரசங்கமாகவே
அங்க மீதிற்றிங்கள் போலெ
எம்பிரானென்னுந் தம்பிரானின்னொளி
இலங்கிக் கொண்டிருப்பதை பார்க்குவீர்—ஹக்காய்
துலங்கு மெய்யுடலுக்குள் நோக்குவீர் (6)

சங்கையாந் திக்கிரிங்கிர்த ஜல்லியை
சாற்றியான முருவாக்கியே—கொண்டு
போற்றும் றாஹியை யுளந்தாக்கியே—வைத்து
தன்வடிவை முன்விழியினில்
நன்னயமாய் பார்த்தன்னேரந்
தன்னை தானே மறந்து தலைவனென்று
தானே தானனவன் றெண்ணுவீர்—ஹக்கன்
மோன மெய் சூழ்ச்சத்தில் நண்ணு வீர் (7)

தோத்திரத்துடனுத்துமா வுடலுக்குள்
தோன்றுந் நாலின் பங்கை காட்டினேன்—னது
ஊன்றுந்தலங்களை தீட்டினேன்—மன
தொந்த மேவிய யந்தமாமதி
சிந்தை மீதினி லெந்த நேரமும்
துதிக்குஞ் ஷாகுல் ஹமீதுப்புலவரின்
சொந்த குமாரனின் வாக்கிது—பிர
பந்த மெனும் ரத்ன சிந்திது (8)

ஆத்துமஞான பஞ்சரத்தின சிந்து முற்றிற்று.

---

## ஆத்துமஞான கீர்த்தனை

பதம் இராகம். தசரதராஜகுமாரா என்ற மெட்டு

பல்லவி

நபிக்கடையாளம்-பதினைந்துண்டும்-அந்த கண்டும்
ஈமான்கொண்டும்-உருதிவிண்டும்-

அனுபல்லவி

ஹபிபு முகம்மதர்க்கடியுந் தோயாது
அருளுற்ற மெய்நிழல்சாகை யிராது
அருசினிற் சிரசும் பதம்கசுத் தராவில்
சுபமா யொன்னுடலுக்குள் தெரிவாய் அதையறிவாய்
மனப்பரிவாய் கண்டுகொள்வீர். (நபிக்சுடை)

1 முன்கண்ட தூரம் பின்னாலே காணும்
மூர்க்க மண்பூச்சிகள் மணர்ந்திடா தோணும்
நன்மேகங் குடைநிழல் வந்திடப்பூணும்
நலமாயொன் கல்புக்குள் காண்பாய்
அருளாண்பாய் தவப்பண்பாய் கண்டுகொள்வீர் (நபிக்)

2 பாத மிரண்டையுங் கண்டோ ரிங்கில்லை
பாங்கான மேனியை கண்டோ ரிங்கில்லை
போதமெய் சிரசை கண்டோ ரிங்கில்லை
பொற்ப்பாய் முஷாஹதா செய்தால்
மனக்கண்ணால் உந்தன் முன்னால் கண்டுகொள்வீர் (நபிக்)

3 மானிலத்தில் மலஜலங்களு மில்லை
மகிமை துயிலாடை களைந்ததுமில்லை
மோனமாய் நகரோமம் வளர்ந்ததுமில்லை
முன்விழிக்கிடைதனில் பார்த்தே மனஞ்சேர்த்தே
சம்சுதாத்தே கண்டுகொள்வீர் (நபிக்)

4 போத மொருநாளு மறந்தது மில்லை
பொன்மேனி கஸ்தூரி கமழ்ந்திடுமெல்லை
வேதர் ஷாகுல் ஹமீது மைந்தனின் சொல்லை
விளப்மா யொன்னுக்குள் பார்ப்பாய் யருள் சேர்ப்பாய்
கலீ தீர்ப்பாய் கண்டுகொள்வீர் (நபிக்)

---

பதம் இராகம். இந்துஸ்த்தான் மேரேமவுலாபீர என்ற மேட்டு

பல்லவி

குன் ஹ்ற தாத்திலிலங்கிடுஞ் சோதியே
குதுபுல்லக்தாபு முஹியித்தினண்டகையே

## அநுபல்லவி

1 முன்னவன் ஒளிவினுக்குள் முச்சுடரா யுற்றவா
மூன்றெழுத்தா யுலகமெங்கு முப்பொருளாய் வந்தவா
நன்மாதவத்தொலி களணிமணியே-கவ்து
நாதர் முஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

2 ஆதிஅருவாவினுக்குள் அரும்பொருளா யுற்றவா
ஆலமாமின்சானில்வந்தே ஐஒளிவாய் நின்றவா
காதிருக இலங்கிடுங் கண்மணியே-ஜீவ
காருண்ய முஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

3 வாழுஞ் சுல்த்தானன்ன சீராவானதி நிற்கூடியே
வந்திடுஞ் சஹேபரியின் வழிதுறந்து நாடியே
ஆளுமென் னுடலுக்குள் அரூபமாகியே-எனக்
கருளுமுஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

4 ஏத்தமா மிவ்வுடலுக்குள்ளிலிலங்கிடும் றாஹானியே
எழுசிபத்தையொருசிபத்தா இணக்குஞ் சமதானியே
காத்து ரட்ச்சிக்குமகு பூபுசுபுஹானியே-அப்துல்
காதிர் முஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

5 காமமாம் கடல் கடந்து சுத்தனினைவாகிட
கல்பினை துறந்துவைத்து கடலைப்போல் விரிவாட
சேமம் தந்தென்னை காக்குமகாமதியே-எங்கள்
செய்யிது முஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

6 மூலமந்திரப்பொருளை மூட்டியகம்பார்த்திட
முசாஹதாவழி இருப்பில் முன்விழியில் தோன்றிட
சீலமாக வந்தருளும் தயாநிதியே-எங்கள்
செய்யிது முஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

7 பாடுஷாகுல்ஹமீதுப் புலவர் மைந்தனை கண்பார்த்திடும்
பாரினி லெந்துயரை தீர்த்து பாக்கியந் தந்து காத்திடும்
நாடும் நாட்டத்திற் குதவிடும் பூபதியே-கவ்து
நாதர் முஹியித்தி னண்டகையே (குன் ஹூ)

பதம் இராகம். இந்துஸ்த்தான்

### பல்லவி

அஜ்மீர் சரீபிலிலங்கு மெய்ஞ்ஞானி
ஆண்டகை காஜா முஹீனுதீனீ.

### அனுபல்லவி

நஜ்முத்தி னென்னும் பிராஞ்சமதானி
நாயகம் காஜா முஹீனுதீனீ.

1. சர்குரு செய்யிது உதுமான் ஹாரூனி
சாஹிபின் றீட்ச்சைபெறும் றகுமானி
தர்பரன் தாத்தான சம்சொளினி
சருதாரே காஜாமுஹீனுதீனி — (அஜ்மீ)

2. தாயார் வயற்றிலுரைந்திருந்தே
சங்கை தருங் கலிமா மொழிந்தே
நாயகமா யுலகில் பிறந்தே
நாதாந்த காஜாமுஹீனுதீனி — (அஜ்மீர்)

3. ஐனுல் எக்கீனை தெரிந்தரசாளும்
ஐனில்லா அரபியே எந்தநாளும்
மெய்ரூபங் கண்டு புகழ்ந்திரைஞ்சும்
வேதாந்த காஜா முஹீனுதீனி — (அஜ்மீர்)

4. அவ்வலு தீனின் மஃரிபத்துல்லா
அவ்வழியுளத்தி லறிந்த ஒலியுல்லா
முவ்வுலகம் புகழுந்திக்ருல்லா
முருசிது காஜா முஹீனுதீனி — (அஜ்மீர்)

5. மாமதினா ரவ்லாவினிற் சென்று
மகிமை முஷாஹரா தாவினிற் நின்று
நாம முகம்மது தரிசனம் பெற்ற
நாதாந்த காஜாமுஹீனுதீனி — (அஜ்மீர்)

6. செய்யிது கியாதுத் தீனின்பாலர்
செல்வி மாஹேற நூரின் குமாரர்
துய்ப்பொருள் ஷாகுல் ஹமீதருள் மைந்தன்
தோத்திரம் காஜாமுஹீனுதீனி — (அஜ்மீர்)

பதம் இராகம் சோமசுந்திரமே என்ற மெட்டு

### பல்லவி

க்ஷேமமந் தந்தருள்வீர்—நன்னுகைமீருன் சாகிபொலியே.

### அநுபல்லவி

காமமாங் கடல் கடந்து
கத்தனின் சோதி தெரிந்து
லாமகானின் மீதிருந்து
நாதன் வேதம் போதம் வந்திட (சேமந்தந்)

1. மாய்கைபட்டணங் கடந்து
மாற்றமான தலமடிந்து
பாயும் பரியேறிகொண்டு
பாடிதேடி கூடி நின்றிட (சேமந்தந்)

2. அம்மா ராவையுங்கந்து
அனியத்தையுந் தவிர்ந்து
செம்மையா உஜூது கண்டு
சேர்ந்து நேர்ந்து கூர்ந்துரைந்திட (சேமந்தந்)

3. படுகுளி கன்னசு கடந்து
பாளொசுவாசு மடிந்து
தொடுக்குஞான நிலையடைந்து
சோதி ஆதி நீதி வந்திட (சேமந்தந்)

4. தொண்ணூற்றூர் தத்துவங்கடந்து
தூலங்கு ஞானவழி யுரைந்து
எண்ணு மெய்ரூபமே வந்து
யேற்றிபோற்றி சாற்றிநின்றிட (சேமந்தந்)

5. காபகவுசைனியிற் சென்று
கருத்தினுற் றுறந்து நின்று
தீபஞானச் சுடர்முன் வந்து
தீரநேரபாரமாகிட (சேமந்தந்)

6. சிபத்திருபதுந் தெரியவே
சிறந்தெழுதலங் காணவே
அபயமெய் உஜூதுவரவே
ஆச நேசபாசம் வந்திட (சேமந்தந்)

7. பாடுஞ் ஷாகுல்ஹமீது மைந்தன்
பகருஞான கவியின் வேந்தன்
கூடு மெய்யுடலறிந்து
கூரித் தேரி சீரிலடங்கிட (சேமந்தந்)

---

பதம் இராகம் சுஜன்ஜீவனு என்ற மெட்டு

பல்லவி

அருமை வேதராம்—ஷாகுல்
ஹமீது நாதராம்—ஆதி

அநுபல்லவி

கருணையானோராம் கவலைதீர்க்கு பாதராம்
கங்கைசூழ் புவிஎங்குமே புகழ்தங்குந் துங்கராம் ஆதி (அரு)

1. தாணியோர்கட்க் குதவிசெய்யுஞ் சங்கையானோராம்
தரித்திரப் பிணியை போக்கும் தருமராஜராம்
பொருமையானோராம் புகழோங்கும் புண்ணியராம்
பொங்குமே யருளெங்குமே பிரசங்கமானோராம் ஆதி (அரு)

2. தர்கொலேயை மீட்டிவிட்ட தத்வ சீலராம்
தரியாபீவி சபதமொளிந்து சாகச்செய்தோராம்
பொற்பதியோராம் புவிபுகழும் வேந்தராம்
புந்தியாமென் சிந்தையிலுறுஞ் சொந்தமானோராம் ஆதி (அரு

3 பூரணரசன் குத்தூசின் புண்ய பாலராம்
புலவர்ஷாகுல் ஹமீதுமைந்தன் போற்றும் பாக்கியராம்
ஆரிபானோராம் அப்தல்காதி ரானோராம்
அங்கமெங்குந் துலங்கும் கஸ்தூரிபொங்கும் வாசராம் (அ)

---

பதம் இராகம்—இந்துஸ்தான்

பல்லவி

ஞானப்பிரகாசம் போலிலங்கிடுஞ் சோதி
நாகூரின்பீர் ஷாகுல்ஹமீதி

அநுபல்லவி

தானவனின் குதுபுல்மஜீதி
சர்மஸ்துபீர் ஷாகுல்ஹமீதி (ஞான)

1 நாகூரென்னும் பதிதானங்கடந்தே
நன்மலக்கூத் தறுவாவிலுரைந்தே
தேசுஜபரூத்தில் செய்கைதெரிந்தே
தெளிவானபீர் ஷாகுல்ஹமீதி (ஞானப்)

2 கல்பென்னும்ஞான கண்ணாடிபார்த்தே
காணுமீரேழுலகந் தெரிந்தே
வல்லவனின் ஹலரத்திலுரைந்தே
வந்திடும்பீர் ஷாகுல்ஹமீதி (ஞானப்)

3 திருமலைசெட்டியின் தர்க்கொலைமீட்டுந்
திருவாரூர்நின்றிடுந் தேரதையோட்டுங்
குருவாயுலகில் மெஞ்ஞானம்புகட்டும்
குதுபானபீர் ஷாகுல்ஹமீதி (ஞானப்)

4 நாகைப்பதிவிளக்கா மணிமேரா
நாதர்யூசுபின் றந்தையானபீரா
ஷாகுல்ஹமீது மைந்தனுக்குபகார
தாஜுல்ஒலி ஷாகுல்ஹமீது (ஞானப்)

---

பதம் இராகம்—மகமதியர் தலத்தில் மாணிக்கமா என்றமெட்டு

பல்லவி

1 சிந்தைநினைந்துருகி வந்தனத்தோடொந்தனின்
செந்தாமரைப் பொற்பாதமே-போற்றுமடியேன்
புந்தியின் பிடிவாதமே
திருவருள்புரியுங் குருபரனேயுன்
றருமதயாகுணமே திருநாகூர்
ஷாகுல்ஹமீ தொலிநாதா-ஆயுள்வயதை
தந்துதவிசெய்யுந் நீதா (சிந்தை)

2 வாதபித்த சிலேத்தும சீதபேதி மந்தார
மேதும்பற்பிணி யோடவே-வாகடநும்பே
ரோதிட வகன்றேடவே
மண்டல மெண்டிசையுந் துதிமேவிய
அண்டரும் வந்துமெ தொண்டுபுரிந்திடும்
மன்னர் ஹமீதொலி நாதா-வரப்பிரசாத
மாமதிய ருளுநீதா (சிந்தை)

3 தின்மையினுல் விளையுங் கன்மவினைகளுடன்
குன்ம குஷ்டங்க ளோடுமே-உன்பேருரைத்தால்
நன்மைய தீகக்கூடுமே
திங்களிலங்கிய அங்கமிலங்கிடும்
தங்கத்துங்கச் சங்க மனோகர
செம்மல் ஹமீதொலி நாதா-நிதநிதமும்
தீர்ச்சைதந் தாண்டிடும் வேதா (சிந்தை)

4 நிலைஇறையோன்சமுகம் தலைமைத்தனம் பெற்றெங்கும்
மலைமீதுவைத்த தீபமே-போற்றி நின்றோர்க்கு
விலைமதியாத லாபமே
நித்த நினைத்திடும் ஷாகுல்ஹமீது
புத்திர னெத்தினம் பத்திபிடித்திடும்
நீதர்ஹமீ தொலியுல்லா-என் சிந்தைதன்னில்
நீடித்திருக்கும் திக்றுல்லா (சிந்தை)

5 உத்தமர் செய்குநஜு முத்தினொலிதமக்கு
பற்றுங் கொம்பை யெடுத்தோரே-பாத்திமாதானி
புத்திரராக வந்தோரே
உம்பர்கள் போற்றிடும் செம்பொற்பதமே
நம்பிடுஞ் ஷாகுல்ஹமீ தொலியுல்லா
உன்கருணை யருள்வீரே-தாசன்றுவாவை
உடன் கபூலாகச் செய்வீரே (சிந்தை)

6 திங்க ளொலிபோன்முக மெங்குமிலங்குகின்ற
சங்கை யூசிபின் றந்தையே-ஈரேழுலகம்
பொங்கித் துலங்கும் விந்தையே
சின்மயமா யென்முன் விழிக்கிடையில்
நன்மயமாய் வருஞ்செம்மல் ஹமீதொலி
திருப்பாதந் தருள்வீரே.தாசன்றுயரை
தீர்த்தனுகூலஞ் செய்வீரே (சிந்தை)

7 நேசமுரு மசன்குத்தூசி னொலிகல்புசங்
தோசமுருங் குமாரரே-தொல்லுலகிலென்
பாசவினைகள் தீர்ப்போரே
நேத்திரத்துடன் மனந்தோத்திரமாகப்
போற்றிடுஞ் ஷாகுல்ஹமீ தொலியுல்லா
நேரிலெனக் கருள்வீரே-தௌஹிதுவழியில்
நின்றின்றிடச் செய்யுமென்பீரே (சிந்தை)

## மீரான் முஹியித்தினாண்டகையை தோத்திரஞ்செய்து பாடிய முனாஜாத்து

### அறுசீர் விருத்தம்

அவ்வலில் மஃறனூ தாத்தேயரும் பொருள் ஹாவியத்தாகி
எவ்வுயி ரினுக்குள் தோன்றி இலங்கிடு நிராமயத்தின்
செவ்விய ஆலமின்சான் சிறந்தமெய்ப் பொருளாய்வந்த
முவ்வருள் செய்குமீரான் முஹியித்தீ னொலியுல்லாவே 1

பாத்தினை பகர்ந்துரைக்கும் பயகம்பர் நபியுல்லாவின்
கோத்திரந் தனிலுதித்த குருமணி யசன்குத்துசின்
னேத்திர மகவென்னாட்ட நிறப்பத்தி லாக்கி வைக்கும்
மூர்த்தியே செய்குமீரான் முஹியித்தீ னொலியுல்லாவே 2

தகப்பனுந் தாயுந்தங்கட் டாளிரு மலரேயல்லால்
ஜெகத்தினி லுங்களைபோற் சிறந்தவ ரொருவரில்லை
அகமகிழ் கொண்டிவ்வேளை யடிமையின் வாட்டமான
முகத்தினை பார்க்குமீரான் முஹியித்தீ னொலியுல்லாவே 3

தவாபருள் ஞானந்தன்னை தரணியிற் றுடராமுடன்
அவாவெனு மாய்கைகொண்டே அலைந்திடாமற் காத்தென்முன்
ஜவாபுட னேரில்வந்தே தயவருள் புரியுங்கோவே
முவாஹி பருளுமீரான் முஹியித்தீ னொலியுல்லாவே 4

ஜன்னத்துல் பிருதவ்சென்ன்ந் தலத்தினுக் கரசரேயுன்
நன்னயப் பதமிரண்டை நம்பியேஇருக்கும் பைய்ய
லென்மனந் துயரந்தீர இதுசமயத்தில் வந்தே
முன்னருள் புரியுமீரான் முஹியித்தீ னொலியுல்லாவே 5

ஹயாத்தெனக் கதிகமாயிவ் வகிலத்திற் றந்துநின்றன்
தியானமே கொண்டெந்நாளுஞ் சிந்தையிற் றரித்திருக்க
தயாள மேவிடுங்கண்ணாலே தமியனைப்பார்த் திப்பூவில்
முயலருள் சேர்க்குமீரான் முஹியித்தி னொலியுல்லாவே 6

கபியருள் திக்கிரினைசை கல்பினி நிலைநிருத்தி
கபியருளாகப் பார்க்க கண்திறந்திடு மவ்வேளை
கபியருள் தாத்துதன்னை காணவே காட்சியாக
மூபினுடன் றோன்றுமீரான் முஹியித்தி னொலியுல்லாவே 7

தம்பினின் ஙிறப்பமான தன்வடிவான தாத்தை
செம்மையாய் கண்டிரைஞ்ச சிந்தித்தே னும்மைகொண்டே
இம்மை யுமறுமையும் பேரிலங்கிட வாழ்வை தந்தே
மும்மல நீக்குமீருன் முஹியித்தீ னெலியுல்லாவே 8

தாத்துஞ் சிபாத்தில்லாத தானமா லாமகானில்
தோத்திரத் துடனெழும்புஞ் சோதிப் பிரகாசமாக
நேத்திர விழிக்கிடையில் நிறப்பமாகிடு மென்னுசான்
மூர்த்தியே செய்குமீருன் முஹியித்தீ னெலியுல்லாவே 9

ரப்பருள் ரிஸ்குதன்னை நலமுட னென்றனுக்கு
உப்புடன் மிகுதமாயிவ் வுலகினிற் கொடுத்துக்காக்குஞ்
செப்பிடுங் குபுதுகௌதென் சிந்தையை விளக்கும்ஞான
முப்பொருள் செய்குமீருன் முஹியித்தீ னெலியுல்லாவே 10

ஸாயிதா யுள்ளவர்க்குஞ் சைய்கொலி மார்களுக்கும்
வாயிது கவ்தா வந்த வள்ளலே யுமது தொண்டன்
ஜாயிலாய்ப் போகிடா மற்றுங்களின் கூட்டத்தோடு
மூயிதாய் சேர்க்கு மீருன்முஹியித்தீ னெலியுல்லாவே 11

சிற்றோடு முகக்கண்மூடி சிறந்தசனைபரியை
சிற்றோடு பார்க்கப் பார்க்க திறக்கு மவ்வழியின்மத்தி
முத்தொடு பவளம் பச்சை முகம்மது நபியுல்லாவின்
முத்தொளிவான மீருன்முஹியித்தீ னெலியுல்லாவே 12

சம்சுதாத்தின் சுடர்கள் தாவிய மேடைதன்னில்
அம் சுய ரூபந்தன்னை யழகுடன் காண்பதர்க்கே
இம்சைகள் நீக்கி ஹக்கோடிணங்கிட கருணைசெய்வீர்
மும்மணிசெய்கு மீருன் முஹியித்தீ னெலியுல்லாவே 13

சபுரெனும் பொருமையோடு சாந்திருக்காது நித்தம்
சுபமுடன் கேள்க்குஞ் சொந்த தொண்டனை இகழ்ந்துவிட்டால்
நிபுணரென்றன்னை காக்க நீணிலத் தெவருமில்லை
முபினுடனுளு மீருன் முஹியித்தீ னெலியுல்லாவே 14

லயிபென்னும் புவியின் வாழ்வை நாடியே ஆசைகொண்டு
தயவில்லா புல்லரோடு சார்ந்துகுவால் செய்யாமல்
ஜெயமிரு கைமுதல்கள் சிறப்புடன் மிகவே தந்து
முயிர்ச்சியிலாக்கு மீருன் முஹியித்தீ னெலியுல்லாவே 15

தரிகினில் சேர்ந்திட்டோனே தள்ளிடாமல் கைதாங்கி
வரிசையாய் வரங் கொடுத்துவைத்து சக்ராத்துவேளை
தெரிசனஞ் செய்ய தோன்றி செய்தா னின்கலைவகற்றி
முரிதினிற் சேர்க்கு மீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 16

வில்லில்லிவாவுக் கொடியின் னிழலினி லொதுங்குதற்கு
தொல்லுலகிடத் தொன்னுமங் தோத்திர மிகவே செய்து
சொல்லியே புகழ்ந்து கேள்க்குந் துவாவினுக்கருளுமைய்யா
முல்லையார் செய்குமீரான் முஹியித்தி னெலியுல்லாவே 17

ஆலமின்சானி னுருத் ததனோடசுசாமான
ஆலமலகூத்தறுவா யருள் ஜபரூத்திற்பிராய்
ஆலம்லாகூத்தில் ஹக்காம் அபரூப சூரத்தோடு
மூலமெய்வடிவு மீரான் முஹியித்தி னெலியுல்லாவே 18

கனிஎன்னும் ரிஸ்க்கின்வாசல் கசானத்தின் றிறவுகோலை
துனியாவில் கொடுத்துதவி தொண்டனை யாள்வதோடு
தனிமைவிலாயத்தென்னுந் தானமும் தந்து காப்பீர்
முனிவர்கள் துதிக்கு மீரான் முஹியித்தி னெலியுல்லாவே 19

பகும்ான லாகூத்தான பதியினிற் றனித்திருந்து
சுகமுட னுஷிக்காகி சூழ்ச்சமெய் ரூபந்தன்னை
அகமகிழ் பொருந்தவே கண்டாநந்தங் கொண்டிருக்க
முகந்தருஞ் செய்கு மீரான் முஹியித்தி னெலியுல்லாவே 20

குதுசியாம் றூஹினுக்குள் குற்றத்துல் ஐனியாக
நிதமிரு விழிக்கிடையில் நின்றிடுந் தாத்துல்லாவே
மதியொளி போலென்னுள்ளத்தில் வாழ்ந்திடுந் திக்றுல்லாவே
முதுமணிசெய்கு மீரான்முஹியித்தி னெலியுல்லாவே 21

காமிலாஞ் செய்கைதேடி காடெங்கு மலைந்துவாடி
சேமநின்தர்கா வந்து சேர்ந்திடகனவில்காட்டு
நாமஞ் சுல்த்தான் கலீபா நாதரின் சீடனென்னை
மூமீனயாக்கு மீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 22

லிகாவெனுஞ் சந்திப்பாக நின்றிடுங் கண்ணடிக்குள்
தகுதிகாமவனுமாக தனித்திடு மஹதுல்லாவை
மிகுதியாய் நினைத்து மவ்த்துவேளையில் திக்ரினோடு
முகப்பத்திலாக்கு மீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 23

முத்தலகா மஹ்லுதாத்தில் முப்பொருள் வடிவுமாக
முத்தலகாய் வந்தமீமில் முகம்மது நபியுல்லாவாய்
முத்தலகாய் தோன்றியெங்கு முளங்கிடுந் தாத்துல்லாவே
முத்தலகாம் செய்குமீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 24

நஸீபுபோ லாகுமென்று நம்பியே இருந்தென்னுளுந்
துவஸிகரங்கொண்டுன் பாதந் துணைஎன நாடுபைய்யல்
விசுவாசமாகவே இவ்வேளையிற் கொள்ளும் ரணத்தின்
முசிபத்தை நீக்குமீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 25

வரிசையுந் தவமும் வாய்ந்த வள்ளலே யுமது பாதம்
தெரிய முஷாஹதாவே செய்துகொண்டிருக்கும்போது
பிரிசமாய் தோன்றி ஞானப்பேரருள் முகத்தை காட்டுஞ்
முருசிதே செய்கு மீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 26

ஹாதியாம் நவியத்ததனை ஹாலிரா யுர்வுகொண்டு
வேதவாய் மொழியினாலே விண்டிடமவ்த்துவேளை
போதமு மாரிடாமல் புகழ்ந்திட நாவினுக்குள்
மூதுரையருளு மீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 27

லாமவுஜூத இல்லல்லா வெனு நாட்டத்துள்ளில்
நேமநன்னிஸ்ட்டை செய்து நிறப்பத்தி லாக்கிவைத்து
சேமமாஞ் சம்சுதாத்துள் சிறப்புடன் றூனய் நிற்கும்
மூமீனே செய்குமீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 28

எப்படைப்புகழும் போற்றி இரஞ்சிடும் பதந்துதித்து
செப்பிருகைகளேந்தி சிறப்புடன் கேள்க்குந்துஹா
ஒப்புக்கொண்டென் றுயர மொளிந்திடக் கருணைசெய்வீர்
முப்புவிபுகழு மீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 29

ஹக்கனை துதிக்குஞ் ஷாகுல்ஹமீதருள் புலவர் லெப்பை
தக்கநற்பாலன் மீறுன் சாகிபு புல்வனுக்கும்
மக்கள் தாய் தந்தை தம்பி மனைவி யோடெவர்க்குந்துஹா
முக்கியஞ் செய்யுமீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 30

அடிமை யான்செய்த பாவ மடங்கலையும்பொருத்து
படியினிலெந்தாய் தந்தை பாவங்கள் பொருத்தென்னோடு
துடர்ந்திடுமாக்கள் செய்த தொல்வினை யகற்றி யாள்வீர்
முடிமன்னர் புகழு மீறுன் முஹியித்தி னொலியுல்லாவே 31

---